மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, ஒவ்வொரு காப்பகத்திலும் 60 குழந்தைகளை நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம். வேலை பார்க்கும் தாய்மார்களின் வீட்டுக் குழந்தைகளைப் பாதுகாப்பதற்குப் பயன்படுகிறது. வேலைவாய்ப்பு எதுவுமே இல்லாமல் வறுமையிலே அடிபட்டுக்கொண்டிருக்கின்ற குழந்தைகளைப் பேணிக் காக்க, அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றவும், ஊட்டசத்து இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கும் பயன்படுகிறது. தாயற்ற குழந்தைகளுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. இந்த வகையில் காரியங்கள் நடைபெறுவதற்கு மாவட்ட அளவில் காரியங்களை நடத்தலாம் என்ற எண்ணமும் அரசுக்கு இருக்கிறது.

Shops in Slum Clearance tenaments

* 714 *Q.*—THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the shopping structures built by the Slum Clearance Board under the Remunerative Scheme at the Marina. opposite the All-India Radio have been leased out to private parties; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) ஆல் இந்தியா ரேடியோ எதிரில், நொச்சிக்குப்பத்தில் குடிசை மாற்று வாரியத்தின் ஆதாயம் தரும் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள சிறு கடைகளின் குத்தகை உரிமை 15—2—1974 அன்று ஏலத்தில் விடப்பட்டது. நான்கு தனிப்பட்ட நபர்கள் 1—3—1974 முதல் ஒரு வருட காலத்திற்குக் குத்தகை எடுத்துள்ளனர்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, அதிலே மொத்தம் எத்தனை கடைகள் இருக்கின்றன? நான்கு பேர்களின் கடைகளும் ஒரே கடையா அல்லது தனித் தனியான கடைகளா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, நான்கு பேர்களும் தனித் தனியாக, அதிலே ஒரு கடிகாரக் கடை, ஒரு பொது விற்பனை நிலையம், ஒரு குளிர் பானங்கள்-அலங்கார பொருட்கள் விற்பனை இடம், ஒரு சிற்றுண்டி விடுதி என்று ஏலத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது.